பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 57 நாள்: 22.05.2017

## பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காசநோய் கண்டறிந்து சிகிச்சை அளித்தல் மற்றும் சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை சார்பில் நோய்கள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றை வராமல் தடுக்கும் முறைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகரம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்களில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை கீழ் இயங்கும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், காசநோய் அறிகுறிகள் உள்ள நோயாளிகள் சளிப்பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தொடர்ந்து ஆறு மாத காலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. முறையாக மருந்துகள் உட்கொள்கிறார்களா என்று அவர்கள் வசிக்கும் பகுதிக்கு சுகாதாரத் துறையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள். காசநோயாளிகள் 6 முதல் 8 மாதம் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டால் இதனை முற்றிலும் குணப்படுத்தலாம். சிகிச்சை எடுக்க தவறும் போது அது தீவிர காச நோயாக மாறிவிடும். அதாவது இப்போது கொடுக்கப்படும் மருந்துகளுக்கு கட்டுப்படாத ஒரு நோயாக மாறிவிடுகிறது. இவ்வகை நோயாளிகளும் தொடர்ந்து 2 வருட காலம் சிகிச்சை எடுத்துக் கொண்டால் நோயை குணப்படுத்த முடியும். இவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் மாதந்தோறும் ரூ.1000/– சிகிச்சை காலம் முடியும் வரை வழங்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி, உலக அளவில் அதிகமாக இறப்பதற்கு காரணமாக உள்ள 10 நோய்களில் ஒன்றாக காசநோய் உள்ளது. இதனை கருத்திற்கொண்டு, மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் காசநோய் இல்லாத சென்னையை உருவாக்க, முதற்கட்டமாக காசநோய் களப்பணியாளர்கள் மூலம் குடிசைப்பகுதிகளில் வீடு வீடாக பரிசோதனை செய்து,

காசநோய் அறிகுறிகள் யாருக்கேனும் உள்ளதா என்று கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, இன்று (22.05.2017) திருவொற்றியூர் மண்டலத்திற்க்கு உட்பட்ட சுனாமி குடியிருப்பு பகுதியில் சுமார் 80 காசநோய் களப்பணியாளர்களை கொண்டு, 6 நாட்களுக்கு வீடு, வீடாக சென்று பொதுமக்களிடம் ஆய்வு செய்து, காசநோயின் அறிகுறிகளான தொடர்ந்து இரண்டு வார இருமல், காய்ச்சல், பசியின்மை, எடை குறைவு, சளியில் இரத்தம், நெஞ்சு வலி ஆகியவை கண்டறியப்பட்டால், உடன் சளிப்பரிசோதனை செய்யப்பட்டு, காசநோய் என்று பரிசோதனையில் தெரிய வந்தால் அவர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சுனாமி குடியிருப்பு பகுதியில் காச நோய் குறித்து விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.T.G. சீனிவாசன், மண்டல நல அலுவலர் மரு. இளஞ்செழியன், காச நோய் திட்ட அலுவலர் மரு. லாவண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**